திருப்பூர் முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

பிறப்பிப்பவர் திரு ரா.ரமேஷ்.,எம்.எஸ்.சி.,எம்.எட்.,எம்.பில்

மூ.மு. எண் 10308/அ1/2021 நாள் .11.2021

பொருள்: தமிழ்நாடு பள்ளிக் கல்வி - அமைச்சுப்பணி - திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை கல்வி மாவட்டம், வா.வேலூர், அரசு உயர் நிலைப்பள்ளி - இளநிலை உதவியாளர் செல்வி த.சங்கீதா என்பாருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் பணி வரன்முறை செய்து ஆணை வழங்குதல் சார்பு

பார்வை:
1. அரசு ஆணை எண் 101 பள்ளிக் கல்வி(வரவு-செலவு)த்துறை நாள் 18.05.2018
2. திருப்பூர் மாவட்டக் கல்வி அலுவலர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண் 6264/அ1/2017 நாள்14.11.2017.
3. உடுமலைப்பேட்டை மாவட்டக் கல்வி அலுவலர் அவர்களது கடிதம் மற்றும் கருத்துரு ந.க.எண் 4882/அ1/2021 நாள் 09.11.2021

..........................

பார்வை 2- இல் காண் திருப்பூர் மாவட்டக் கல்வி அலுவலர் அவர்களின் செயல்முறைகளின் படி தமிழ்நாடு அரசுப்பணியாளார் தேர்வாணையம் மூலம் இளநிலை உதவியாளர் பணிக்கு தேர்வு செய்யப்பட்டு பள்ளிக் கல்வித்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட பணிநாடுநர்களில் திருப்பூர் மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, பல்லடம், வட்டாரக் கல்வி அலுவலகத்தில் இளநிலை உதவியாளர் ஆக நியமனம் வழங்கப்பட்ட செல்வி த.சங்கீதா என்பாருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்திட கோரும் கருத்துரு பார்வை- 3 இல் காண் கடிதத்தின்படி பெறப்பட்டது.

செல்வி த.சங்கீதா, இளநிலை உதவியாளர், அரசு உயர் நிலைப்பள்ளி, வா.வேலூர், உடுமலைப்பேட்டை கல்வி மாவட்டம், திருப்பூர் மாவட்டம் என்பாருக்கு மாவட்டக் கல்வி அலுவலர் உடுமலைப்பேட்டை அவர்களது பரிந்துரை அடிப்படையிலும் தலைமை ஆசிரியர் அரசு உயர் நிலைப்பள்ளி, வா.வேலூர் அவர்களால் வழங்கப்பட்ட சான்றுகளின் அடிப்படையிலும் பார்வை 1- இல் காண் அரசு ஆணையில் வழங்கப்பட்டுள்ள அதிகாரப் பகிர்வின் அடிப்படையிலும் தமிழ்நாடு அமைச்சுப்பணி விதிகள் மற்றும் தமிழ்நாடு அரசுப்பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம்-2016 ஆகியவற்றின் கீழ் விதித் தளர்வுகள் ஏதும் பெறப்பட வேண்டிய தேவை எழவில்லை என்பதாலும் பல்லடம் வட்டாரக் கல்வி அலுவலகத்தில் நியமனம் பெற்று பணியில் சேர்ந்து தற்போது மாறுதல் பெற்று வா.வேலூர் அரசு உயர் நிலைப்பள்ளியில் இளநிலை உதவியாளர் ஆகப் பணியாற்றும் செல்வி த.சங்கீதா என்பாருக்கு அன்னார் இளநிலை உதவியாளராகப் பணியில் சேர்ந்த 15.11.2017 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் கீழ்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகின்றது

நிபந்தனைகள்

1. மேற்காண் பணியாளர் பணிவரன்முறை செய்யப்பட்ட நாள் முதல் மூன்றாண்டு பணிக்காலத்தில் இரண்டு ஆண்டு தொடர்ந்து பணியாற்றி அன்னாரது தகுதிகாண் பருவ காலத்தினை மன நிறைவு அளிக்கும் வகையில் பூர்த்தி செய்ய வேண்டும்.
2. மேற்காண் பணியாளர் அன்னாரது தகுதிகாண் பருவ காலத்திற்குள் பவானிசாகர் அரசு அலுவலர் பயிற்சி நிறுவனத்தால் நடத்தப்படும் இளநிலை உதவியாளர்களுக்கான அடிப்படை பயிற்சியினை முடித்து அதற்குறிய அனைத்து தேர்வுகளிலும் தேர்ச்சி பெற வேண்டும்.
3. மேற்காண் பணியாளர் அன்னாரது தகுதிகாண் பருவ காலத்திற்குள் தமிழ்நாடு அரசுப்பணியாளார் தேர்வாணையத்தால் அரசு பணியாளார்களுக்கு நடத்தப்படும் மாவட்ட அலுவலக நடைமுறை நூல் தேர்ச்சி பெற வேண்டும்.

மேற்கண்ட விபரத்தினை சம்மந்தப்பட்ட பணியாளரது பணிப்பதிவேட்டில் உரிய முறையில் பதிவுகள் மேற்கொள்ள சம்மந்தப்பட்ட அலுவலருக்கு அறிவிக்கப்படுகின்றது. மேலும் பணிப்பதிவேடு பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புதலினை உடன் அனுப்பிடவும் அறிவிக்கலாகிறது.

பணிப்பதிவேடு 1 தொகுதி

28/11/21

முதன்மைக் கல்வி அலுவலர்
திருப்பூர்
23/11/21

பெறுநர்
செல்வி த.சங்கீதா, (உரிய அலுவலர் மூலம்)
இளநிலை உதவியாளர்,
அரசு உயர் நிலைப்பள்ளி,
வா.வேலூர்.

நகல்:
அரசு உயர்நிலைப்பள்ளி
1. தலைமை ஆசிரியர், ~~வட்டாரக் கல்வி அலுவலகம்~~ வா.வேலூர்
2. மாவட்டக் கல்வி அலுவலர், உடுமலைப்பேட்டை — தகவலுக்காக அனுப்பலாகிறது